மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 84/2024**

வா.சா. 1 தங்கவேல், S/o குருசாமி

நாள்: 10.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1)** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தற்போது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய வழக்கறிஞர் சொல்லித்தான் நிரூபன வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் உள்ள பிரதிவாதிகளை எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடமிருந்து தங்கராஜ் என்பவர் பறித்து சென்று விட்டார்.

2) ஆவணத்தை என்னிடம் இருந்து பிடிங்கி சென்றது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன் என்றால் இல்லை. மேற்படி விபரங்களை நான் தாக்கல் செய்துள்ள நிரூபன வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால்

சரிதான். அசல் ஆவணம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணங்கள் எதுவும் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கண்டுள்ள சொத்துக்கான சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை நான் கடந்த 2008 வது வருட முதல் 3 செண்ட் மனை பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்தேன் என்று சொன்னால் சரிதான். விற்பனை செய்தது போக மீதியிடம் என் வசம் உள்ளது.

3) விற்பனை செய்தது போக மீதி இருக்கும் 20 ¼ செண்ட் நிலத்தை கொடுத்து பிரதிவாதியிடம் பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் கடந்த 12.03.2019 அன்று பதிவு செய்யப்படாத முத்திரைத்தாளில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு விட்டு தற்பொழுது ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை என்று வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கண்ட சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 84 செண்ட் என்று சொன்னால் சரிதான். என்னுடைய குடும்ப உறுப்பினர்களின் சம்மதத்தின் பெயரில் பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

4) கடந்த 2009 வது வருடத்தில் நானும் என்னுடைய குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து இருளாண்டி என்பவருக்கு 1314 சதுர அடி அளவுள்ள நிலத்தை விற்பனை செய்தேன் என்று சொன்னால் நான் மட்டும்தான் விற்பனை செய்தேன். அதுபோலவே முருகன், தங்கராஜ், காசிராஜன், S.M. முத்தையா ஆகியோர்களுக்கும் கிரயம் செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி நபர்களுக்கு வழக்கு சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்தது தொடர்பாக நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் எதுவும்

சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு என்னால் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட சொத்தில் வீடு கட்டி, பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் பட்டா மாறுதல் செய்யப்படவில்லை ஆனால் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள்.

5) வழக்கு சொத்துகளுக்கு பிரதிவாதிகளிடம் ஒரு சென்ட்க்கு 27,000/- வீதம் கடந்த 12.03.2019 அன்று ஒப்பந்தம் பேசி மொத்தம் ரூ. 5,46,750/- என முடிவு செய்து முன் பணமாக ரூ. 5,16,750/- பிரதிவாதியிடமிருந்து பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட காலகட்டத்தில் முறையாக பதிவு செய்ய இயலவில்லை என்றும் நிபந்தனை தளர்வு கிடைக்கும்பொழுதுபதிவு செய்து கொடுப்பதாக நான் ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு அவர்களை ஏமாற்றும் எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6) 296/2010 பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் 1594 சதுர அடி அளவுள்ள சொத்தை கிரையம் செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு விட்டு அது நிலுவையில் இருக்கும் பொழுது கான்சாபிரத்தைச் சேர்ந்த சந்தரமணி, தேவி ஆகியோர்களுடன் அடமான ஆவணம் எழுதிக் கொண்டேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதாக எனக்கு எப்பொழுது தெரிய வந்தது என்று சொன்னால் எனக்கு எதுவும் தெரியாது. நான் பிரதிவாதியுடன் எவ்வித ஒப்பந்தமும்

ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

7) பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட விபரம் எனக்கு தெரியும் என்றும் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து கடந்த 2019 வது வருடத்திலிருந்து பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. அருகில் இருப்பவர்களை விசாரணை செய்தால் யாருடைய அனுபவத்தில் வழக்கு சொத்து இருந்து வருகிறது என்ற விவரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான்.

8) நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதியை ஆக்கிரமிப்பாளர் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் நான் அவ்வாறு ஏதும் சொல்லவில்லை. எனக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்துக்களை முழுவதுமாக கிரையம் செய்து கொடுத்து விட்டேன் என்றும், என் வசம் எந்த சொத்துக்களும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் என்னுடைய அனுபவத்தை பிரதிவாதி இடைஞ்சல் செய்ததால் எனக்கு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் சட்ட விரோத செயலை ஊர் பெரியவர்களிடம் சொல்லியதாகவும் அதன் அடிப்படையில் ஊர் பெரியவர்கள் பிரதிவாதியை

கண்டித்ததாகவும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை.

9) சொத்து பிரச்சனை சம்பந்தமாக ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்டிருந்த 1 ஏக்கர் 84 சென்டு நிலத்தை பிரித்து விற்பனை செய்தது போக மீதி வைத்திருந்த 20 ¼ சென்று நிலத்தை பொறுத்து பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு அவரை ஏமாற்றும் எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் பொருட்டு விற்பனை செய்த சொத்தை விற்பனை செய்யவில்லை என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம். ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு